# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03–ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1 –ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | புவனேஸ்வரி | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**03. 09.2024 OS.No. 3/2024 வா.சா. 1 புவனேஸ்வரி ஆஜர்**

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டில் இருந்து வருகிறேன். தாவா இடத்தை யாரிடமிருந்து எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் எனது அப்பா கிருஷ்ணன் என்பவரிடமிருந்து 2016–ம் வருடம் கிரையம் பெற்றேன். கிரையம் வாங்கியபோது மேற்படி இடம் காலியிடமாக இருந்ததா என்றால் காலியிடமும், சிறிய கடையும் இருந்தது. தாவா இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.49/112, சர்வே எண்.49/113, சர்வே எண்.49/114, சர்வே எண்.49/115 ஆகும்.

2) கிரையம் பெற்ற இடத்தின் மொத்த விஸ்தீரணம் 652 1/2 சதுர அடி ஆகும். என் அப்பா கிருஷ்ணன் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மால்கள்தான் என்னுடைய கிரையபத்திரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற இடத்தில் எந்த வருடம் வீடு கட்ட ஆரம்பித்தேன் என்றால் 2021–ம் வருடம் ஆரம்பித்தேன். மேற்படி இடத்தை விஏஓ, சர்வேயர் மூலமாக அளந்துதான் கிரையம் பெற்றேனா என்றால் இல்லை. என் அப்பாவிடம் நான் கிரையம் பெற்றதால் அப்படியே வாங்கிவிட்டேன்.

3) தாவா இடத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா இடம் GR பகுதி என்பதால் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை. தாவா இடத்தில் நான் எத்தனை சதுர அடியில் வீடு கட்டியுள்ளேன் என்றால் பின்னால் 2 அடியும், வடக்கு பக்கம் 4 அடியும் போட்டு வீடு கட்டியுள்ளேன். எத்தனை சதுர அடி என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. நீதிமன்ற ஆணையர், விஏஓ, சர்வேயர்

தாவா இடத்தை அளக்கும்போது தெற்கு வடக்காக 25 அடி உள்ளது என்றுஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. தெற்கு வடக்காக 29 1/2 அடி உள்ளது.

4) தாவா இடத்தை நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு 1-ம் பிரதிவாதி ரமேஷ் அவரது வீட்டின் வாசலின் கிழக்குபக்கம், எனது வீட்டிற்கு தென்புறம் 7 அடி சந்தை பாதையாக அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த பாதை பாப்பம்மாள் கோவிலுக்காக போடப்பட்ட பாதையாகும். என் வீட்டிற்கு பின்புறம் மேற்கு பக்கம் எத்தனை அடி காலியிடமாக விட்டுள்ளேன் என்றால் 2 அடி ஆகும். என் வீட்டின் மேற்கு பக்கம் தென்புறம் அத்துமால் கல் உள்ளது என்றால் இல்லை. வடக்கு பக்கம் கல் உள்ளது. வீடு கட்டும்போது தென்புறம் நான் இடம்இல்லாமல் வீடு கட்டியுள்ளேன் என்றால் தென்புறம் 3 அடி போட்டுள்ளேன்.

5) தென்புறம் நான் இடம் விடவில்லை என்றாலும், நான் வீட்டின் தென்புறம் ஜன்னல் வைக்கும்பொழுது 1-ம் பிரதிவாதி திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. நான்தான் 1-ம் பிரதிவாதி ரமேஷ் மீது என் வீட்டிற்கு தெற்கு பக்கம் போட்டிருந்த தகர செட்டை எடுக்க சொல்லி திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலீசார் விசாரணையின் போது என்ன சொன்னார் என்றால் 1-ம் பிரதிவாதி மேற்படி இடத்தில் தகர செட் போட்டு ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று சொன்னார்கள்.

6) என் கணவர் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சிவகங்கை காவல்துறையில் பணிபுரிந்துவருகிறார். எனது கிரையபத்திரத்தில் தென்புறம் நான்குமாலில் எங்களால் விடப்பட்ட 3 அடி இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும் எங்களால் விடப்பட்ட 3 அடி இடம் என்று சொல்லாமல் 7 அடி சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சந்து சர்வே எண்.49/112, சர்வே எண்.49/115, சர்வே எண்.49/116-ல் வருகிறது என்றால் சரியல்ல.

7) நீதிமன்ற ஆணையர், விஏஓ, சர்வேயர் ஆகியோர்கள் தாவா சொத்தை அளக்கும்போது என் பெயரில் பட்டா இல்லை என்பதால் யாருடைய பெயரில் தாவா 7 அடிச்சந்து வருகிறது என்று குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் இடத்தில்

வருகிறது என்று சொன்னார்கள். தாவா சொத்தான 7 அடிச்சந்து 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுச்சந்து என்றும், நான் என் வீட்டின் தென்புறம் இடம் விடாமல் அத்துமாலுக்கு வீடுகட்டி கொண்டதால் 1-ம் பிரதிவாதியின் எதிர்ப்பை மீறி என் வீட்டின் தென்புறம் சட்டவிரோதமாக ஜன்னல் வைத்து 1-ம் பிரதிவாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) 1-ம் பிரதிவாதியின் தகப்பனாரும், அவரது பெரியப்பா ராஜகோபாலும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் ஆவண எண்.1826/1997-ல் வடக்கு பக்கம் நான்குமாலில் நமக்கும், பாப்பம்மாள் கோவிலுக்கும் பாத்தியப்பட்ட பொது நடைபாதை என்று தெளிவாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.